**செ. கு. எண்: 103** **நாள் :24.07.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.7.2016

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்த “அன்பே வா”, “ஆயிரத்தில் ஒருவன்” உள்ளிட்ட **500** திரைப்படங்களுக்கு மேல் நடித்த பிரபல திரைப்பட நடிகர் மறைந்த “பசி” நாராயணன் அவர்களின் குடும்பத்தினர், அவரது மறைவுக்குப் பிறகு எவ்வித வருமானமும் இன்றி வறுமையான சூழலில் வாழ்ந்து வருவதாகவும், வாழ்வாதாரத்திற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்ற செய்தியை ஊடகங்கள் வழியாக நான் அறிந்தேன்.

திரு. “பசி” நாராயணன் அவர்கள் குடும்பத்தினரின் வறுமையான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து திரு. “பசி” நாராயணன் அவர்களின் மனைவி திருமதி வள்ளிக்கு 10 லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த 10 லட்சம் ரூபாய் திரு. “பசி” நாராயணன் அவர்களின் மனைவி திருமதி வள்ளி அவர்களின் பெயரில் “தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்” வைப்பு நிதியாக வைக்கப்படும். இந்த வைப்பு நிதியில் இருந்து வட்டியாக மாதந்தோறும் 8,125/- ரூபாய் திருமதி வள்ளி அவர்களுக்குக் கிடைக்கப் பெறும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**